**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, ALANGUDI**

**Deposition of witness**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**STC No 259/2023**
**Deposition of witness for PW.5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தேவராஜ் | தந்தை/ கணவர் பெயர் | : | வேலாயுதம் |
| கிராமம் | : | பசுவயல் | மாவட்டம் | : | புதுக்கோட்டை |
| வயது | : | 60/2026 | தொழில் | : | |

Solemnly affirmed by Selvi.B.Sendhurdevi, Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**(A1 Present. A2 Absent. Petition filed u/s 317 Cr.P.C filed and allowed.Both side Counsel Present) (Date:11.08.2026)**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aadhaar Card of Witness verified.**

**<u>முதல்விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன் .என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். கடந்த 2022 ஆம் ஆண்டு எனது வீட்டிற்கு அருகே வாசலில் எனது குழந்தைகள் தீபாவளிக்காக வெடி வெடித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது எதிரிகள் இருவரும் என் வீட்டிற்கு வந்து ஏன் வெடி வெடிக்கிறீர்கள் என்று கேட்டு அந்த குழந்தைகளை அடித்து விட்டடார்கள். அப்போது மாலை சுமார் ஆறு மணி முதல் ஏழு மணி வரை இருக்கும்.அது சம்பந்தமாக புகார் கொடுத்திருந்தோம். இரண்டு நாட்களுக்கு போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து படம் வரைந்து நான்கு எல்லை குறித்துக் கொண்டு விசாரணை செய்கிறார்கள் நானும் எனது அண்ணனும் சாட்சி கையொப்பம் செய்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இவ் வழக்கின் புகார்தாரர் எனது மகன் என்றால் சரிதான். நானும் எனது மகனும் சேர்ந்து எதிரிகளை அடித்து விட்டோம் என்று இதே நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். ஆனந்தன் திருட்டுத்தனமாக மின்சாரம் எடுப்பதாக கூறி சுந்தரம் பொய்யாக புகார் கொடுத்து அதனால் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பொய் சொல்லுகிறேன் என்றும் சுந்தரம் புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல.நான்தான் எதிரிகளை அடித்து விட்டு அந்த வழக்கிலும் தவிப்பதற்காக இவ்வழக்கின் புகார் இணை எனது மகன் மூலம் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியில்லை. நான் எனது சகோதரர் மற்றும் சுந்தரம் ராமன் தினேஷ் எனது மகன் இளந்தமிழன் ஆகியோர் சேர்ந்து வெண்ணல்குடி மருத்துவமனை அருகில் வைத்து எதிரிகளை அடித்து விட்டோம் என்று சொன்னால் சரியல்ல. காவல் நிலையத்திற்கு நாங்கள் புகார் அளிக்க செல்லும் பொழுது எங்களை விசாரித்தார்கள் என்று சொன்னால் சரியல்ல வீட்டில் வைத்தார்கள். நான் சொல்வது போல் எவ்வித சம்பவம் நடைபெறவில்லை என்றும் பொய்யாக சாட்சி மொழிகிறேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தில் வைத்து நான் எவ்வித கையொப்பமும் செய்யவில்லை என்றும் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்று சொன்னால் சரியில்லை.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சி அதை படித்துப் பார்த்து சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு அவரால் கையொப்பமிடப்பட்டது**

**மாவட்ட உரிமையியல் மற்றும்**

நீதித்துறை நடுவர்,

**ஆலங்குடி(பொறுப்பு)**